[18th February 1961

been adjusted in the State accounts. The Government of India are examining the details of the cases forwarded to them.

In respect of educational loans, if the loanees are either non-claimants, or dead or absconding, this Government propose to remit the loan amount. The Government of India have been requested to make good the entire loss on this account.

SRI S. M. ANNAMALAI : நம்முடைய மாநிலத்திலிருந்து பிற நாடுகளுக்குச் சென்றவர்களுக்கு எவ்விதமான உதவியும் கிடையாது. இப்பொழுது பாகிஸ்தானிலிருந்த வந்த அகதி களுக்கு மட்டும் 50 சதவிகிதம் மத்திய சர்க்கார் தருவதாகச் சொல்லியும்கூட, கொடுப்பதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது? ஏன் இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தி அந்தப் பணத்தை பெறக்கூடாது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் அளித்த விடையிலிருந்து இந்தக் கேள்விகள் எழவில்லை. மத்திய சர்க்கார் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கணக்குப் பார்த்துத் தான் கொடுக்கவேண்டும். ஆனால், இந்த அகதிகளுக்கு கொடுக் கிறதா, இல்லையா என்பதுதான் பிரச்னை. எதையோ மனதில் வைத்துக்கொண்டு இந்த அகதிகளுக்கு கொடுக்கக்கூடாது என்று நினைத்தால் அது கனம் அங்கத்தினர் அவர்களுடைய அபிப் பிராயமாக இருக்கலாம். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது.

Family Planning

* 353 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில ளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஃபோர்ட் பௌன் டேஷன் (Ford Foundation) மூலம் உதவி தரப்படுகிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No grant from the Ford Foundation has been received by this Government for Family Planning.

* 361 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ நிலையம் நடத்தும் தொழிற்சாலைகளுக்கு சர்க்கார் உதவி புரிகிறார்களா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) No, Sir.

(இ) Does not arise.